සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

| මගේ අංකය<br>**எனது இல** DDD/HO/04/Circular /2017<br>My No | ඔබේ අංකය<br>**உமது இல** ..........................................<br>Your No | දිනය<br>**திகதி** 2017.04.07<br>Date |
|---|---|---|

## சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2017/05/01

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகுள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கு.

**சமூக வலுவூட்டல் மற்றும் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2017**
**“சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டம்”**
**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2017/05**

என்னால் தங்களுக்கு அனுப்பப்பட்ட எனது சம இலக்கமும் 2017.03.08ம் திகதியிடப்பட்டதுமான மேற்படி சுற்றறிக்கைக்கு மேலதிகமாக

02. சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் போது கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்துகின்றேன்.

### 2.1 உற்பத்திச் சங்கங்களை அமைத்தல்

* மாதிரிக் கிராமத்தில் / கொத்தணி கிராமத்தில் ஒவ்வொரு உற்பத்திற்கேற்றவாறு சங்கங்கள் இருத்தல் வேண்டும்.

* அவ்வாறு இல்லாவிடின் உற்பத்தி ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு சங்கம் ஒன்றினை அமைத்துக் கொள்ள வேண்டியதுடன் அது பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

* கிராமம் ஒன்றில் பல உற்பத்திகள் உள்ள சந்தர்ப்பங்களில் மற்றும் அதில் 07 அங்கத்தவர்களுக்கு மேலானோர் உள்ள சந்தர்ப்பங்களில் உற்பத்திகளின் தொகைக்கேற்றவாறு தொகுதிக்கு சங்கங்களை அமைத்திருக்க வேண்டியதுடன் அது பல்வேறு சங்கங்களின் கூட்டுடனான ஒரு தாய்ச்சங்கம் ஒன்றினை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

* ஆரம்பித்துக் கொள்ளப்பட்ட சங்கம் அல்லது சங்கங்களின் நன்மைகள் அதன் அங்கத்தவர்களுக்கு மாத்திரம் இருக்க வேண்டியதுடன் அங்கத்தவர்களல்லாத பயனாளிகளுக்கு நன்மைகள் கிடைக்கப்படமாட்டாது.

### 2.2 பயனாளிகளைத் தெரிவு செய்தல்

* பயனாளிகளை தெரிவு செய்யும் போது ஏற்கனவே அந்த உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள பயனாளிகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டியதுடன் கருத்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படும்போது அதில் விருப்பமுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு கருத்திட்டத்துடன் தொடர்புபட முடியும்.

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla**

අධ්‍ය ක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail- dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ(මානව සම්පත්)
பணிப்பாளர் ( மனிதவளம்)
Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
**Hot Line : 0112-889007**

ප්‍රධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ(ක්ෂුද්‍ර මූල්‍ය )
பணிப்பாளர் (குறு நிதி )
Director ( Micro Finance)
011-2889003
011-2887469
**Hot Line:0112-885582**

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2887280
**Hot Line: 011- 2887722**

* தெரிவு செய்யப்படுகின்ற பயனாளிகளினதும் குறைந்த வருமானம் பெறுவோர், பெண்களை வீட்டின் பிரதான குடியிருப்பாளராக கொண்ட மற்றும் மாற்றுத் திறனாளிக் குடும்பங்களுக்கு முக்கியத்துவம் என்ற அடிப்படையில் தயாரித்து, உற்பத்திச் சங்கத்தின் சிபாரிசினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
* மாதிரிக் கிராமத்தின் சகல பயனாளிகளினதும் வீடுகளுக்குச் சென்று தேவைகளை இனங் காண்பது மற்றும் அவற்றினை முன்னுரிமைப்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.
* பயனாளிகளின் தேவைகளை இனங்காணும் படிவத்தினை பொருத்தமான பிரகாரம் மாவட்ட பணிப்பாளரால் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

**2.3 கருத்திட்டங்களை இனங்காணுதல்**

* மாதிரிக் கிராமம் ஒன்றில் ஏதெனும் உற்பத்தி ஒன்றினை மேம்படுத்துவதற்கு மூலதனப் பண்டங்களின் தேவைப்பாடுகள் எற்படுமிடத்து பயனாளியின் விருப்பத்தின் பிரகாரம் மாத்திரம் தேவையான மூலதன உபகரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்பதுடன் இது தொடர்பில் பயனாளிகள் புத்தகத்தில் விசேட பதிவு ஒன்றினை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் மேறகொள்ளப்படல் வேண்டும்.
* மாதிரிக் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் அது நேரடியாக குறித்த உற்பத்தியுடன் இணைந்த கருதிட்ட தேவைக்கேற்றதாக இருத்தல் வேண்டும்.
* திணைக்களப் பங்களிப்பானது ரூபா 50000/= ஐ விட அதிகரிக்குமிடத்து அதன் பொருட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள கருத்திட்ட அறிக்கையொன்றுடன் தங்களது சிபாரிசுடன் எனக்கு அனுப்புவது அவசியமானதாகும்.
* திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் சகல வேலைத்திட்டங்களையும் ஒன்றினைந்த கிராம அபிவிருத்தி திட்டம் ஒன்றினை தெரிவு செய்து கொண்ட சமுர்த்தி மாதிரிக் கிராமங்களில் செயற்படுவது மிக முக்கியம் வாய்ந்ததாக அமையும்.

இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தாங்கள் உட்பட உத்தியோகத்தர்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள்**

01. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ அமைச்சர் திரு.எஸ்.பி. திஸாநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
02. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ பிரதி அமைச்சர் திரு.ரஞ்சன் ராமநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
03. சகல மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் - த.கூ.க. பொருட்டு
04. சகல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் - த.கூ.க. பொருட்டு
05. செயலாளர் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
06. மேலதிக செயலாளர் (கிராமிய அபிவிருத்தி / சமுர்த்தி) சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
07. பிரதேச செயலாளர் ………………….. - த.கூ.க. பொருட்டு உ.ந. பொருட்டும்
08. கணக்காய்வுத் தலைமையதிபதி, கணக்காய்வுத் தலைமையதிபதி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
09. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு உ.ந. பொருட்டும்
10. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
11. சகல பிரிவுத் தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு உ.ந. பொருட்டும்
12. சமுர்த்தி முகாமையாளர்…………………….. - உ.ந. பொருட்டும் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் பொருட்டும்.